Notice of expulsion - serious behaviour/s of concern

Using the telephone interpreter service to contact the school

# வெளியேற்றல் அறிவிப்பு – தீவிரமான நடத்தை/கள் குறித்த கவலை

## பாடசாலையைத் தொடர்பு கொள்ள தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவையைப் பயன்படுத்துதல்

மாணவரின் பெயர்

Name of student

அன்புள்ள பெற்றோர்/பராமரிப்பாளர்

NSW கல்வித்துறை மாணவர் நடத்தைக் கொள்கை மற்றும் இடைநிறுத்தம் மற்றும் வெளியேற்றும் நடைமுறைகளின்படி உங்கள் பிள்ளைக்கு நான் வழங்கிய வெளியேற்ற அறிவிப்பு – தீவிரமான நடத்தை/கள் குறித்த கவலையின் விவரங்களை இணைக்கப்பட்ட கடிதம் கோடிட்டுக் காட்டுகிறது.

மாற்றுக் கல்விக்கான இடத்தை நாங்கள் ஏற்பாடு செய்யும் வரை உங்கள் குழந்தை இடைநீக்கத்தில் இருப்பார். அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து பாடசாலையைச் சேர்ந்த ஒருவர் உங்களைத் தொடர்புகொள்வார்.

உங்கள் குழந்தை வெளியேற்றப்பட்டால் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தகவல் இணைக்கப்பட்டுள்ளது.

இணைக்கப்பட்ட கடிதத்தைப் புரிந்துகொள்வதில் உங்களுக்கு சிரமம் இருந்தால், தயவுசெய்து பாடசாலையை தொடர்பு கொள்ளவும், நாங்கள் உங்களுக்கு விளக்கம் தரலாம். பள்ளிக்கூடத்தை தொடர்புகொள்ள உங்களுக்கு உரைப்பெயர்ப்பாளர் ஆதரவுதவி தேவைப்பட்டால், தயவு செய்து 131 450 என்ற எண்ணிற்கு அழைத்து உங்கள் மொழி பேசும் உரைப்பெயர்ப்பாளரைக் கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் எண்ணை தொலைபேசி இயக்குனரிடம் சொல்லுங்கள், உங்கள் உரையாடலில் உங்களுக்கு உதவ அவர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை அழைப்பில் இணைப்பார். இந்த சேவைக்காக உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது.

அதிபர் பெயர்

Name of Principal

அதிபரின் தொலைபேசி எண்

Principal’s phone number